இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி 1

இறுதிப் பரீட்சை - 2006

ESP 1261 - ஆசிரியர் கல்வியாளர்கட்கான உளவியல்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 08.03.2006 நேரம்: மு.ப 10.00 - பி..ப 1.00

நான்கு(04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

1. (i) கல்வியற் கல்லூரிகளில் ஆசிரிய மாணவர்களின் நடத்தைகளை ஆய்வு செய்வதற்காக ஆசிரிய கல்வியியலாளர்கள் பயன்படுத்தக்கூடிய முறைகள் இரண்டைப் பெயரிட்டு விபரிக்க.

   (ii) நீர் மேலே குறிப்பிட்ட முறைகள் இரண்டையும் பயன்படுத்தி வெளிப்படுத்தக்கூடிய ஆசிரிய மாணவர்களின் நடத்தை இயல்புகளை உதாரணங்கள் தந்து விளக்குக.

   (iii) உங்கள் கல்வியற் கல்லூரியின் வகுப்பறை நிலைமைகளின் குறிப்பான உதாரணங்கள் தந்து மேற்கூறிய, முறைகள் இரண்டினதும் வரையறைகளை ஆராய்க.

2. (i) பின்வரும் தலைப்புகளின் கீழ் கற்றல் கொள்கைகள் இரண்டினது ஒற்றுமை வேற்றுமைகளை தருக.

   (அ) தனியாளில் கற்றல் நடைபெறும் முறை
   (ஆ) மாணவர்களின் ஊக்கலை அதிகரிக்கக்கூடிய முறை
   (இ) கற்றலை உறுதிசெய்யும் முறை

   (ii) “ஓர் ஆசிரிய கல்வியாளரிடம் சகல கற்றல் கொள்கைகள் தொடர்பாகவும் முழு விளக்கம் இருத்தல் வேண்டும்” இக் கருத்தை பொருத்தமான உதாரணங்கள் தந்து உறுதிப்படுத்துக.

3. (i) நீர் தெரிவு செய்த ஒரு பாடத்திற்கு பொருத்தமாக புருணர் விளக்கியுள்ள ஒழுங்கு கட்டமைப்பு வகை மூன்றையும் விபரிக்க.

   (ii) நீர் தெரிவு செய்த பாடத்தின் போதனா செயன்முறைமை விருத்தி செய்கையில் ஒவ்வொரு கட்டமைப்பு செல்வாக்கு செலுத்தும் முறையினை பரிட்சிக்க.

   (iii) கற்பவர் தொடர்பான மாறிகள் மூன்றைப் பெயரிட்டு கற்பித்தல் - கற்றல் செயன்முறைக்கு அவற்றின் அழுத்தத்தை விளக்குக.

4. பின்வரும் மூன்று(03) பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(i) தனியாளின் ஆக்கத்திறனை விருத்திசெய்தல் தொடர்பாக ஆசிரியர்கள், பெற்றோர்களின் வகிபங்கு

(ii) உளவியலில் தோன்றியுள்ள துறைகள்

(iii) ஹில்கார்ட்டின் நுண்மதி தொடர்பான கொள்கை.

(iv) வாழ்க்கை பூராவும் விருத்திசார் அணுகுமுறை

(v) கால்ரோஜர்ஸ் விளக்கியுள்ளவாறான வளர்ந்தோர் கற்பவர்களின் (Adult leaners) இயல்புகள்.

5. (i) மாஸ்லோவின் கொள்கைக்குப் பொருத்தமாக ஊக்கலின் அடிப்படைகளை விளக்குக.

(ii) ஆசிரிய மாணவர்களின் சுய - ஊக்கலை கட்டியெழுப்புகையில் நீர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மூன்றை(03) ஆராய்க.

(iii) பின்வரும் ஒவ்வொரு வழிமுறைகள் ஆசிரிய மாணவர்களின் ஊக்கலை அதிகரிக்க எவ்வாறு காரணமாக அமைகின்றது என்பதை விளக்குக.

1. குழு செய்திட்டங்களைப் பூர்த்திசெய்தல்
2. பரிசோதனை முறை ரீதியான கற்றல்

6. (i) கட்டிளைமைப்பருவம் ஒருவரின் வாழ்க்கையில் முக்கிய காலப் பகுதியாக கருதப்டுவதற்கு மூன்று காரணங்களை விளக்குக

(ii) எமது சமூகத்தில் கட்டிளமைப் பருவத்திலிருந்து வளர்ந்தோர் பருவத்திற்கு எவ்வாறு மாறுதல் ஏற்படுகின்றது. குறிப்பான உதாரணங்கள் தந்து விளக்குக.

(iii) தமது சுயஎண்ணக்கருவை விருத்தி செய்தல் தொடர்பாக கட்டிளமைப் பருவத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றை விளக்குக.

(பதிப்புரிமை யுடையது)